**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– 2016–2017 ஆம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவசமாக உதவி உபகரணங்கள் வழங்க திட்டத் தொடராணை மற்றும் ரூ.66,79,200/– நிதி ஒப்பளிப்பு செய்து– ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண்.38

நாள்: 10–05–2017
ஹேவிளம்பி, சித்திரை 27,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:-

1. அரசாணை(2D) எண்.03, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 27–07–2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2985/இவாததி/ 2016, நாள் 24.08.2016 மற்றும் 14.10.2016.

-------------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி 2015–2016 ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு, விலையில்லா உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவும், விலையில்லா உதவி உபகரணங்கள் வாங்கி வழங்குவதற்கு, ரூ.75,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 2016–17 ஆம் நிதியாண்டிற்கு மாற்றுத் திறனாளிகளின் தேவைக்கேற்ப மூன்று சக்கர சைக்கிள்கள், மடக்கு சக்கர நாற்காலிகள், கறுப்பு கண்ணாடிகள், பிரெய்லி கைக்கடிகாரங்கள், கால்தாங்கிகள் (மூல பொருட்கள் பதிலாக முழுவதும் வடிவமைக்கப்பட்ட கால்தாங்கிகள்) ஊன்று கோல்கள் மற்றும் பார்வைத்திறன் குறைபாடுடைய கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பாடநூல்களின் எழுத்துக்களை பெரிதாகக் காட்டி சுயமாக படிக்க உதவும் கருவி (Magnifier) ஆகிய உதவி உபகரணங்களை வழங்கி அவர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்த உதவி செய்ய வேண்டியது அவசியமாவதால், 2016–17 ஆம் நிதியாண்டிற்கு உதவி உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கென ரூ.75,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும், மேலும், நடமாடும் சிகிச்சைப் பிரிவுத் திட்டம் மூலமாக சிகிச்சை பெறும் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு நடைப்பயிற்சி உபகரணம் (Rolator) தேவைப்படுவதால் இந்த உபகரணம் 2016–17 ஆம் ஆண்டில் புதிய கூடுதல் உபகரணமாக இத்திட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டிற்குள் சேர்த்து வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

**3.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த அரசு அதனை ஏற்று, **2016–2017** ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு விலையில்லா உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, விலையில்லா உதவி உபகரணங்கள் வாங்கி வழங்குவதற்கு, ரூ.**66,79,200/–** (ரூபாய் அறுபத்தாறு இலட்சத்து எழுத்தொன்பதாயிரத்து இருநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், இத்தொகையை பெற்று, உரியவாறு செலவினம் மேற்கொள்ள, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | உதவி உபகரணங்கள் விவரம் | | தேவையான எண்ணிக்கை | ஒன்றின் விலை (தோராயமாக) ரூ. | நிதி ஒதுக்கீடு கோரும் தொகை ரூ. | | வாங்கும் முறை |
|---|---|---|---|---|---|---|---|
| **1** | மூன்று சக்கர சைக்கிள் | | **300** | ரூ.**7,040/–** | ரூ.**21,12,000/–** | | தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** மற்றும் விதிகள் **2000** படி திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் |
| **2** | சக்கர நாற்காலி | | **200** | ரூ.**5,940/–** | ரூ.**11,88,000/–** | | |
| **3** | பிளாஸ்டிக் காலிபர் (முழுவதும் வடிவமைக்கப்பட்டது) | | | | | | |
| | 1.Ankle Food Orthosis Unilateral) | 50 | **8** | ரூ.**750/–** | ரூ.**6,000/–** | ரூ.**1,48,540/–** | |
| | 2. Ankle Food Orthosis (Bilateral) | | **8** | ரூ.**1,450/–** | ரூ.**11,600/–** | | |
| | 3. Knee Ankle Food Orthosis (Unilateral) | | **8** | ரூ.**2,240/–** | ரூ.**17,920/–** | | |
| | 4. Knee Ankle Food Orthosis (Bilateral) | | **8** | ரூ.**4,400/–** | ரூ.**35,200/–** | | |
| | 5. Hip Knee Ankle Food Orthosis (Unilateral) | | **8** | ரூ.**3,190/–** | ரூ.**25.520/–** | | |
| | 6. Hip Knee Ankle Food Orthosis (Bilateral) | | **10** | ரூ.**5,230/–** | ரூ.**52,300 /–** | | |
| **4** | மெட்டல் காலிபர் (முழுவதும் வடிவமைக்கப்பட்டது) | | | | | | |
| | 1.Ankle Foot Orthosis (Unilateral) | 50 | **8** | ரூ.**1,090/–** | ரூ.**8,720/–** | ரூ.**1,64,760/–** | |
| | 2. Ankle Foot Orthosis (Bilateral) | | **8** | ரூ.**1,980/–** | ரூ.**15,840/–** | | |
| | 3. Knee Ankle Food Orthosis (Unilateral) | | **8** | ரூ.**2,970/–** | ரூ.**23,760/–** | | |
| | 4. Knee Ankle Food Orthosis (Bilateral) | | **10** | ரூ.**4,920/–** | ரூ.**49,200/–** | | |
| | 5. Hip Knee Ankle Food Orthosis (Unilateral) | | **8** | ரூ.**3,290/–** | ரூ.**26,320/–** | | |
| | 6. Hip Knee Ankle Food Orthosis (Bilateral) | | **8** | ரூ.**5,115/–** | ரூ.**40,920/–** | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | ஆக்சிலரி ஊன்றுகோல் (Auxiliary Crutches) | 1107 | ரூ.320/– | ரூ.3,54,240/– | |
| 6 | எல்போ ஊன்றுகோல் (Elbow Crutches) | 632 | ரூ.320/– | ரூ.2,02,240/– | |
| 7 | கறுப்புக் கண்ணாடிகள் | 2645 | ரூ.130/– | ரூ.3,43,850/– | |
| 8. | பிரெய்லி கைக்கடிகாரங்கள் | 1000 | ரூ.1,200/– | ரூ.12,00,000/– | |
| 9. | பார்வைத்திறன் குறைபாடுடைய கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பாடநூல்களின் எழுத்துக்களை பெரிதாகக் காட்டி சுயமாக படிக்க உதவும் கருவி (Magnifier) | 100 | ரூ.7,600/– | ரூ.7,60,000/– | |
| 10. | முழுவதும் வடிவமைக்கப்பட்ட செயற்கை அவயங்கள் | 50 | ரூ.4,110/– | ரூ.2,05,500/– | |
| | **மொத்தம்** | **6,134** | | **ரூ.66,79,130/– (OR) ரூ.66.79.200/–** | |

4. மேலே பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன்– மாநிலச் செலவினங்கள்–CO மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு திட்டம் 19. இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல்''.

(த.தொ.கு. 2235–02–101–CO-1917)

5. மேலே பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.66,79,200/– 2017–18 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்டும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2017–18 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் ஒரு குறிப்பிட்ட தொகையை சேர்ப்பதன் மூலம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்படும். அத்தகைய நிதியொதுக்கத்தை எதிர்நோக்கி மேலே பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை 2017–18 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித்(சந /வ.செ.பொ–1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**6.** மேலும், மேற்படி உதவி உபகரணங்களை உரிய வழிமுறைகளின்படி வாங்கி, மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கும்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். கால்தாங்கிகள் மற்றும் செயற்கை அவயங்களை பொருத்தவரை, ஆயத்த உபகரணம் வாங்கி வழங்கப்பட இயலாத நிலையில் உள்ளதால் அவற்றுக்குத் தேவையான மூலப்பொருட்களை உரிய நடைமுறைகளைப் பின்பற்றி வெளிச்சந்தையில் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் வாங்கி, அவற்றை மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல மையங்களிலுள்ள தொழிற்கூடங்களில் ஒன்றிணைந்து பயனாளிகளுக்கு வழங்கவும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், மேற்படி உதவி உபகரணங்களின் விலை, உத்தேச விலையைக் காட்டிலும் அதிகமாக இருப்பின், அதிகபட்சமாக, ஒப்பளிப்புத் தொகைக்கு மிகாமலும், அதே நேரத்தில், உதவி உபகரணங்களுக்கான தொகை, குறிப்பிடப்பட்ட தொகையைவிட குறைவாக இருப்பின், எஞ்சிய அரசின் நிதி ஒப்பளிப்புத் தொகைக்கு ஏற்ப, கூடுதல் எண்ணிக்கையில் உதவி உபகரணங்களை வாங்கிடவும் அரசு அனுமதியளிக்கிறது.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.20664/நிதி(சந)/2017, நாள்04.05.2017–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. மற்றும் இதற்கான கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண்.438 (நானூற்று முப்பத்து எட்டு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநிலஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர்,சென்னை–18.
தலைமைக் கணக்காயர் (இருப்பு) தலைமைச் செயலகம், சென்னை–9.
தலைமைக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

**நகல்:-**

நிதி (சந/ வ.செ.பொ–I/II) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை,சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்